
# 22 செப்டம்பர் 2023- தினசரி நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| நீர் திறப்பு குறித்த உத்தரவில் உச்ச நீதிமன்றம் தலையிடாது . | செய்தி:நீர் திறப்பு குறித்த உத்தரவில் உச்ச நீதிமன்றம் தலையிடாது.<br>• காவிரி நீர் விவகாரத்தில் கர்நாடகா அல்லது தமிழகத்திற்கு ஆதரவாக தலையிட உச்ச்நீதிமன்றம் மறுப்பு<br><br>முக்கிய குறிப்புகள்:<br>• இரு அண்டை மாநிலங்களுக்கு இடையேயான நீர்ப் பங்கீட்டை நிர்வகிப்பதற்கான ஒருங்கிணைந்த நிபுணர்கள் கொண்ட காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு (CWRC) மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) ஆகிய இரு அமைப்புகளுக்கும் முடிவு எடுக்கும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது .<br>• தமிழகத்திற்கு நாள் ஒன்றுக்கு 5,000 கனஅடி வீதம் நீரை திறந்துவிட கர்நாடகாவுக்கு CWRC ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. |
| உச்ச நீதிமன்றம் | முக்கிய குறிப்புகள்:<br>• இந்தியாவின் உயர்ந்த நீதி அமைப்பாக உச்ச நீதிமன்றம் உள்ளது .<br>• இந்த நீதிமன்றம் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரத்தை கொண்டது மற்றும் அதன் முடிவுகள் இந்தியாவில் உள்ள மற்ற அனைத்து நீதிமன்றங்களுக்கும் கட்டுப்படும்.<br>• இந்திய அரசியலமைப்பு சட்டத்தை விளக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கு உண்டு மேலும் அரசியலமைப்பிற்கு முரணானது எனக் கண்டறியப்படும் எந்தவொரு சட்டத்தையும் ரத்து செய்யும் அதிகாரமும் உச்சநீதிமன்றத்திற்கு உள்ளது .<br>• உச்சநீதிமன்றம் இந்திய தலைமை நீதிபதி உட்பட 34 நீதிபதிகளைக் கொண்டது.<br>• உச்சநீதிமன்ற நீதிபதிகள் கொலிஜியத்தின்(நீதிபதிகள் கொண்ட குழு )பரிந்துரையின் பேரில் இந்திய குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

| | |
|---|---|
| உலோக சிலைகள் கண்டெடுக்கப்பட்டன<br> | செய்தி: மூன்று உலோகச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.<br>• பேரிகை பகுதியின் அருகே மூன்று உலோக சிலைகள் கண்டெடுக்கப்பட்டன..<br>• கிராமவாசி ஒருவர் வீடு கட்டுவதற்காக குழி தோண்டியபோது சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.<br>• மூன்று சிலைகளில் ஒரு ஆண் கடவுள் மற்றும் இரண்டு பெண் தெய்வங்கள் அடங்கும் . |
| தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மருத்துவ கல்லூரிகளில் **150** எம்பிபிஎஸ் இடங்கள் மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது | செய்தி:தமிழகத்தில் புதிய மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் அதிகப்படியான இடங்கள் சேர்க்க கூடாது என தேசிய மருத்துவ ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.<br>• தேசிய மருத்துவ ஆணையத்தின் இளங்கலை மருத்துவ வாரிய புதிய விதிமுறைகளால் தமிழகத்தில் புதிய அரசு அல்லது தனியார் மருத்துவக் கல்லூரிகளை உருவாக்குவதையோ அல்லது தற்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளில் 150-க்கும் மேற்பட்ட மருத்துவ(MBBS) இடங்களை சேர்ப்பதையோ தடைசெய்யம் வகையில் இருப்பதால் இனிமேல் மருத்துவ சேர்க்கைகள் .கடினமாகி விடும் என் அச்சம் ஏற்பட்டுள்ளது .<br>முக்கிய குறிப்புகள்:<br>• புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கான வழிகாட்டுதலின்படி, மருத்துவக் கல்லூரிகளில் எம்பிபிஎஸ் படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை 150 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.<br>• 2024-25ம் ஆண்டு முதல் எம்பிபிஎஸ் இடங்களை அதிகரிக்க விருப்பம் கொண்ட மருத்துவ கல்லூரிகள். இனிமேல் எம்பிபிஎஸ் மாணவர்களின் எண்ணிக்கையை 150-க்கு மேல் அதிகரிக்கக் கூடாது. |
| பயிர் சேதத்திற்கு தமிழக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் . | செய்தி:பயிர் சேதத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.560 கோடி இழப்பீடு வழங்கப்படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.<br>• தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த நிதியாண்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வறட்சி, வெள்ளம், புயல், பருவமழை போன்ற இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட 6 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.560 கோடி இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்தார்.<br>முக்கிய குறிப்புகள்: |

| | |
|---|---|
| | • பயிர் காப்பீட்டுத் திட்டம் 37 மாவட்டங்களை உள்ளடக்கிய 14 குழுக்கள் மூலம் அடையாளம் காணப்பட்டு காப்பீட்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகிறது.<br>• கடந்த நிதியாண்டில் 24.45 லட்சம் ஏக்கர் பரப்பளவில் 11.2 லட்சம் விவசாயிகள் நீண்ட கால வளரும் சம்பா பயிர்களை சாகுபடி செய்து காப்பீடு செய்துள்ளனர்.<br>• மாநில அரசு 1,375 கோடி ரூபாயையும், மத்திய அரசு 824 கோடி ரூபாயையும், விவசாயிகள் 120 கோடி ரூபாயையும் காப்பீடு மானியமாக பகிர்ந்து கொண்டனர். |
| பாம்பன் பாலம்<br> | செய்திகளில்:புதிய பாம்பன் பாலம் நவம்பர் மாத காலக்கெடுவை மீறக்கூடும்<br>• தமிழ்நாட்டின் பாம்பன் தீவில் உள்ள மண்டபத்தை ராமேஸ்வரத்துடன் இணைக்கும் வகையில் கட்டப்படும் புதிய பாம்பன் ரயில்வே கடல் பாலம் நவம்பர் மாதத்திற்குள் தயாராகாமல் போகலாம்.<br>முக்கிய குறிப்புகள்:<br>• இப்பாலம் 2019ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்டு வருகிறது.<br>• அதிக காற்று வீசக்கூடிய மற்றும் புயல் தாக்கும் அபாயமுள்ள கடல் சூழலில் அமைந்துள்ள புதிய பாலம் புவியியல் ரீதியாக சவாலான நிலப்பரப்பில் கட்டப்பட்டு வருகிறது.<br>• தென்னிந்திய நகரமான ராமேஸ்வரத்துடன் ரயில்வே பாலம் இணைக்கிறது, இது வடக்கில் பத்ரிநாத் , மேற்கில் துவாரகை மற்றும் கிழக்கில் பூரி ஆகியவற்றுடன் நான்கு சார் தாம்(Char Dham) யாத்திரை புண்ணிய தளங்களில் ஒன்றாகும். |
| தமிழகம் ரூ.**100** கோடி 'பெரு நிதியம் ' தொடங்க உள்ளது. | செய்தி:<br>புத்தொழில்(Startup) முதலீட்டை மையமாகக் கொண்டு தமிழ்நாடு ரூ.100 கோடி 'பெருநிதியம் ' தொடங்க உள்ளது.<br>• தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் துறையின் புத்தொழில் முதலீடு நிதிகளை உருவாக்கப்படுவதற்கும், அதனை செயல்படுவதற்கும் ஆதரவளிப்பதற்காக 100 கோடி ரூபாய் ' பெரு நிதியம் ' ஒன்றை தமிழக அரசு உருவாக்க உள்ளது..<br>• ஊரக வளர்ச்சி , பெண்கள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் பருவநிலை மாற்ற நடவடிக்கை போன்ற துறைகளில் முதலீடு |

| | |
|---|---|
| | செய்யும் நிறுவனங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும்.<br>• இதன் ஒரு பகுதியாக புதன்கிழமை அன்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் "புத்தொழில்-புத்தாக்க கொள்கை 2023" என்று கொள்கை ஒன்றினை வெளியிட்டார் . |

பதிப்புரிமை © ***Adda247***
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் *Adda247* இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுப்பு அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.